# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (09.09.2023 முதல் 13.09.2023)

**அறிக்கைஎண் 072/2023** **தேதி.08.09.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 05.09.23 முதல் 07.09.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 34°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 22-24 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (05.09.2023 முதல் 07.09.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 13.09.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05/09 | 06/09 | 07/09 | தேதி | நாள்-1 09/09 | நாள்-2 10/09 | நாள்-3 11/09 | நாள்-4 12/09 | நாள்-5 13/09 |
| 0.0 | 0.0 | 0.1 | மழை (மி.மீ) | 2 | 3 | 3 | 0 | 3 |
| 32 | 32 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 30 | 30 | 30 |
| 24 | 22 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 21 | 20 | 20 |
| 6 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 7 | 8 | 7 | 7 |
| 83 | 87 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 56 | 78 | 76 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 50 | 40 | 40 |
| 22 | 22 | 24 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 16 | 16 | 14 | 14 |
| 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (09.09.2023 முதல் 13.09.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த நான்கு நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம்

மணிக்கு 14-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **09-09-2023** | 2.0 | 6.0 | 8.0 | 2.0 | 4.0 | 9.0 | 5.0 | 3.0 | 2.0 | 0.0 | 9.0 | 0.0 | 2.0 |
| **10-09-2023** | 3.0 | 7.0 | 9.0 | 3.0 | 5.0 | 9.0 | 6.0 | 4.0 | 3.0 | 1.0 | 10.0 | 2.0 | 3.0 |
| **11-09-2023** | 1.0 | 2.0 | 2.0 | 1.0 | 1.0 | 3.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 |
| **12-09-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **13-09-2023** | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 1.0 | 2.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல மாவட்டங்களில் இலேசான மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8-20 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அதிகபட்சமாக காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ மேல் எதிர்பார்க்கப்படுகிறது.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும்.<br>வறட்சியான பகுதிகளில் பயிர்கழிவு மூடாக்கு பயன்படுத்தி மண் ஈரத்தினை பாதுகாக்கலாம்.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்யவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். கரும்பில் நுனிகருகல் நோய் காணப்பட்டால், புரோபிகோனசோல் @ 1மிலி/லிட்டர் + இமிடாகுளோபிரிட் 17.5 SL @ 0.3மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளித்து பொக்கோ போயிங் நோய் வருவதை தடுக்கலாம். |
| தக்காளி | வளர் பருவம் | நிலவும் வானிலையில் காய்கறிப்பயிர்களில் இலைத்துளைப்பானை கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டை சாற்று கரைசலை தெளிக்கவும். தக்காளியில் முன்பருவ இலைகருகல் நோயை கட்டுப்படுத்த மேங்கோசெப் என்ற பூசனக் கொல்லியை 2 கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 14-16 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். வாழையில் சிகாடோகா இலைப்புள்ளி நோயை மேலாண்மை செய்ய புரபிகோனசோல் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி மருந்துடன் ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |
| கால்நடை | | தற்போதைய வானிலையில் மாடுகளுக்கு கோமாரி நோயும் மடுவீக்க நோயும் வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே பால் கறப்பதற்கு முன்பும் பின்பும் மடுவினை ஒரு சதவீத பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவவும். கொட்டிலையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

- தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் வறட்சியான பகுதிகளில் பயிர்கழிவு மூடாக்கு பயன்படுத்தி மண் ஈரத்தினை பாதுகாக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**